**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண். 33/2015**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04 ஆம் நாள் செவ்வாய்கிழமை

பி.வா.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ்.முத்துராமன்,பி.எல்.,சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**DW- 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சுப்ரமணியன் | த/பெ.: | பொன்னுசாமி |
| கிராமம்: | பட்டைவெளி | தாலுக்கா: | நொச்சியூர் |
| மதம்: | | தொழில்: | விவசாயம் |
| வயது: | 61 | முகவரி: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of **04.11.2025.**

**முதல் விசாரணை :-**

நான் வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சி 2 ஆவேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்திருந்தது. அதனடிப்படையில் இன்று ஆஜராகியுள்ளனேன். மோகன்தாஸ் என்பவரை எனக்கு தெரியும். மோகன்தாஸின் தகப்பனார் பெயர் மாரியப்ப வள்ளாளதேவர். அவர் பட்டைவெளி கிராமத்தில் வசித்தார். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் உயிலில் (பி.வா.சா.ஆ.6) உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். இந்த ஆவணத்தில் நான், மாரியப்ப வள்ளாளதேவர் எழுதி அவரே படித்து காட்டினார். அதில் நான் கையெழுத்து போட்டேன். மாரியப்ப வள்ளாளதேவர் முதலில் கையெழுத்து போட்டார். அவர் கையெழுத்து போட்டப்பின்பு நான் போட்டேன். நான் 3 வது நபராக கையெழுத்து செய்துள்ளேன். முதலில் மாரியப்ப வள்ளாளதேவரும் அதன்பின்னர் அவரது தம்பி சாம்பசிவமும் அதன்பின்னர் நானும் கையெழுத்து போட்டோம். மாரியப்ப வள்ளாளதேவர் தம்பி சம்பசிவம் தற்போது உயிருடன் இல்லை. உயிலில் 2 வதாக போடப்பட்டுள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை - வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.